**தலைப்பு 425 - நெல் மற்றும் தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்தி மற்றும் உயர்தொழிநுட்ப இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

நெல் மற்றும் தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்தி மற்றும் உயர்தொழிநுட்ப இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நெல் மற்றும் தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்தி மற்றும் உயர்தொழிநுட்ப இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கிய பொழிப்பறிக்கை 2022 ஆகஸ்ட் 23 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 செப்தெம்பர் 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நெல் மற்றும் தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்தி மற்றும் உயர்தொழிநுட்ப இராஜாங்க அமைச்சின் நிதிக் கூற்றுக்களினுள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய

பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1) (ஈ) பிரிவின் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கும்வகையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக் கூற்றுக்களில் ஏசீஎஸ்-3 மாதிரியில் காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் மாற்றப்பட்ட எனினும் திறைச்சேரி புத்தகங்களில் காண்பிக்கப்படாத காசு மீதி ரூபா 5,795,693 ஆகும். அம் மீதி நிதி நிலைமைக் கூற்றில் நிதிச் சொத்துக்களின் கீழ் நிகழ்நிலை பணமாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சு அவ்வாறு காண்பித்திருக்கவில்லை. | அரச கணக்குகள் தயாரிப்பதற்காக வெளியிடப்பட்ட 2021.11.26 திகதிய 2021/03 ஆம் இலக்க பொது கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முறை சரியானதாகும். நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டியது 2021/12/31 இல் உள்ளவாறு நிறுவன புத்தகங்களுக்கு அமைவான மீதி என குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நிறுவன புத்தகங்களிற்கு அமைவாக மீதி சரியானதென தெரிவிக்கின்றேன். அவ்வாறே நிதி நிலைமை கூற்றின் மாதிரியில் பணம் காண்பிப்பதற்கான விசேட இடமொன்று இல்லை. ஏசீஏ 3 மாதிரியின் 1 ஆம் குறிப்பு ஊடாக திறைச்சேரி புத்தகங்களில் காண்பிக்கப்படாத நிகழ்நிலை காசு மீதி காண்பிக்கப்பட்டுள்ளது. | மாற்றப்பட்ட எனினும் திறைச்சேரிக்கு பெறப்படாத பணம் நிகழ்நிலை பணமாக நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) சபரகமுவ மாகாண சபை மற்றும் மகாவலி அதிகார சபைக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட கட்டுநிதியில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்பட வேண்டிய எனினும் தீர்க்கப்படாத தொகை முறையே ரூபா 9,642,131 மற்றும் ரூபா 18,195,192 ஆக காணப்பட்டது. இந்த தொகை தீர்க்கப்படாத கட்டுநிதியாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் குறித்த கட்டுநிதி மீதிகள் 2022 மார்ச் 31 மற்றும் மார்ச் 03 ஆம் திகதிகளில் தீர்க்கப்பட்டிருந்தது. | <u>சபரகமுவ மாகாண சபை - ரூபா 9,642,131</u><br>காணி, மகாகண நீர்பாசணம், விவசாயம், கால்நடை உற்பத்தி மற்றும் கடற்றொழில் அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் 2021.12.24 திகதிய AGM/2121804 ஆம் இலக்க கடிதத்தில் ஒப்பந்தக்காரரினால் முன்வைக்கப்பட்ட பின்வரும் காரணங்களினால் ஒப்பந்தக் காலம் நீடிப்பதற்கு ஏற்பட்டமையினால் 2022 ஆம் ஆண்டில் உப கட்டுநிதி தீர்ப்பதற்கு கால அவகாசம் கோரப்பட்டுள்ளது. சந்தையில் மூலப்பொருட்கள் பற்றாக்குறையினால் தொழிநுட்ப ஆலோசனை பெற்றுக் கொள்வதற்கு நேர்ந்தமையும், கொவிட் நிலைமையினால் பயணத் தடைகள் விதிக்கப்பட்டமையினால் உத்தியோகத்தர்களை கடமையில் அமர்த்தல் மட்டுப்படுத்தப்படல், பொருட்களின் கொள்வனவு நிறுத்தப்படல் மற்றும் காலநிலை தாக்கங்கள் இதற்கு காரணமாகியுள்ளது.<br><br><u>இலங்கை மகாவலி அதிகார சபை ரூபா. 18,195,192</u><br>இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தின் 2021.12.21 திகதிய MASL/FIN/AMTC Form/03/2021 ஆம் இலக்க கடிதத்தில் AMTC பயிர் நிலம் அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக உபகரணம் கொள்வனவு செய்வதற்கு கட்டளை இடப்பட்டுள்ளதுடன், காணப்படுகின்ற கொவிட் நிலை மற்றும் ஏனைய பொருளாதார காரணங்களினால் அக் கட்டளையிடப்பட்ட பொருட்கள் 2021.12.31 இற்கு முன்னர் கொள்வனவு செய்வதற்கு காணப்படுகின்ற பிரயோக அசௌகரியங்கள் குறிப்பிட்டு மேற்படி உப கட்டுநிதி 2022 ஆம் ஆண்டில் தீர்ப்பதற்கு கால அவகாசம் கோரப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனங்களின் கோரிக்கைகளின் பிரகாரம் திறைச்சேரி செயற்பாட்டு திணைக்களத்திலிருந்து அதற்காக அங்கீகாரம் கோரப்பட்ட போதிலும், கட்டுநிதி தீர்ப்பதற்காக காலம் நீடிப்பதற்கு அங்கீகாரம் வழங்க முடியாதென 2022.01.18 திகதி தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2021.12.31 இல் கட்டுநிதி தீர்க்கப்படுவதற்கு முடியாது போனது.<br>2022/2/23, 2022/3/14 திகதிகளிலும் தொடர்ச்சியாக இந்த கட்டுநிதியை தீர்க்குமாறு தெரிவித்து கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. தற்போது மேற்படி கட்டுநிதி தீர்க்கப்பட்டுள்ளதென தெரிவித்துக் கொள்கின்றேன். | ஆண்டிற்கு உரியதாக பெற்றுக் கொடுக்கப்படு-கின்ற கட்டுநிதி ஆண்டு இறுதி திகதியில் தீர்க்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சு தீர்க்கப்பட்ட வேண்டிய ரூபா 687,041 ஆன தொகை அத் திகதியில் தீர்க்கப்படாமையினால் தீர்க்கப்படாத கட்டுநிதியாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அத் தொகை 2022 சனவரி 07 ஆம் திகதி தீர்க்கப்பட்டிருந்தது. | 2021.12.31 இல் உள்ளவாறு தீர்ப்பதற்கிருந்த வடமேல் மாகாணத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட முற்பணத் தொகையில் எஞ்சிய பணப்பெறுமதியான ரூபா 684,041.38 ஆன தொகையினை தீர்ப்பதற்கான காசோலை 2021.12.31 இல் மாகாண விவசாய அமைச்சினால் வடமேல் மாகாண பிரதான செயலாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் மாகாண சபையிலிருந்து 2021.12.31 இல் இந்த அமைச்சிற்கு காசோலை வழங்கப்படாததுடன் 2022.01.06 ஆம் திகதி அமைச்சானது வங்கி கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | ஆண்டிற்கு உரியதாக வழங்கப்படும் கட்டுநிதி ஆண்டு இறுதி திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படல் வேண்டும். |

## 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேவைகள் அடையாளப்படுத்தப்பட்டு செலவின விடயங்களுக்காக நிதியேற்பாடு ஒதுக்கப்படாமையின் காரணத்தினால் 03 மீண்டெழும் செலவின விடயங்களின் மற்றும் 02 மூலதன செலவின விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 495,260,000 ஆன நிதியேற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 21/1596/304/134 ஆம் இலக்க மற்றும் 2021.08.31 திகதிய அரச செலவின மீளாய்வின் பிரகாரம் திறைச்சேரிக்கு எதிர்பார்க்கப்பட்ட நிதியேற்பாட்டு சேமிப்பினை அனுப்பிய போதிலும் திறைச்சேரியினால் நிதியேற்பாடு ஏற்கப்பட்டிருக்கவில்லை. | ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு முழுமையாக பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | மதிப்பீடு தயாரிக்கும் போது சரியாக கணிக்காமையின் காரணத்தினால் 10 மூலதன செலவின விடயங்கள் மற்றும் 19 மீண்டெழும் செலவின விடயங்களின் தேறிய நிதியேற்பாட்டில் 12 சதவீதம் தொடக்கம் 96 சதவீதம் வரையிலான வீச்சில் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. மேற்படி மூலதன மற்றும் மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 5,582,900,000 ஆன காணப்பட்டதுடன் அதில் ரூபா 2,749,284,009 ஆன தொகை, அதாவது 49 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | 425-1-2-0-1001, 1002, 1003, 1101, 1201, 1202, 1203,1301, 1302, 1402, 1506 செலவின விடயங்களுக்காக 21/1596/304/134 ஆம் இலக்க மற்றும் 2021/8/28 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அரச செலவினம் மட்டுப்படுத்தப்பட்டு நிதியேற்பாடு கையளிக்கப்பட்ட போதிலும் திறைச்சேரியினால் ஏற்கப்படவில்லை. | ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு முழுமையாக பயன்படுத்தப்படல் வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

**அவதானிப்புக்கள்**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணம். | | | |
| (i) | நிதி பிரமாணம் 104 (1) (அ) | நட்டம் அல்லது சேதம் ஏற்பட்டவுடனே அதன் அளவு, அதற்கான காரணங்கள் உறுதியாக தெரிந்துக் கொள்ளல் மற்றும் பொறுப்பு கூற வேண்டியவர்கள் உறுதி செய்வதற்காக புலனாய்வு ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2021 மார்ச் 01 ஆம் திகதி விபத்தொன்று ஏற்பட்டிருந்த அமைச்சினால் பயன்படுத்தப்படுகின்ற KW- 8202 ஆம் இலக்க ஜீப் வாகனம் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரசிற்கு சொந்தமான வாகனமொன்றின் விபத்தொன்றின் பின்னர் அது தொடர்பாக அமைச்சு மேற்கொள்ள வேண்டிய அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் நி.பி 104 புலனாய்வு அறிக்கை தயாரித்தல் தாமதமாகியது. தற்போது நி.பி 104 (4) இறுதி புலனாய்வு அறிக்கை பெறப்பட்டுள்ளதுடன், அக் குழுவினால் வாகனம் பதுபார்த்தல் பொருத்தமானது என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. | நி.பி 104 (1) (அ) பிரகாரம் புலனாய்வொன்றில் பொறுப்பு கூற வேண்டியவர்கள் உறுதி செய்யப்படல் வேண்டும். |
| (ii) | நிதி பிரமாணம் 110 | பிரமாணம் பிரகாரம் நட்டங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றேன். நட்டங்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டுள்ளது. | நி.பி 110 பிரகாரம் நட்டங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணிச் செல்லப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | நிதி பிரமாணம் 1646 | வாகனங்களின் பயணங்கள் தொடர்பான மாதாந்த பொழிப்புக்களின் அசல் பிரதி மற்றும் ஓட்டக் குறிப்புக்கள் அடுத்த மாத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் 2021 ஆண்டிற்குரிய அமைச்சினால் பயன்படுத்தப்பட்ட 22 வாகனங்களுக்குரிய ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க-வில்லை. | 2021 ஆம் ஆண்டிற்குரிய அனைத்து ஓட்டக் குறிப்புக்களும் கையளிக்கப்பட்டுள்ள-துடன் வருங்காலத்தில் அனைத்து மாதத்திலும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அக் குறிப்புக்கள் கையளிப்பதற்காக நடவடிக்கை எடுக்குமாறு போக்குவரத்து பிரிவின் உத்தியோகத்தர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதி பிரமாணம் பிரகாரம் வாகனங்களின் ஓட்டக் குறிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 2.4 பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகளுக்கு உட்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் அமைச்சின் மூலதன சொத்துக்கள் மறுசீரமைப்பு மற்றும் மேம்படுத்தலின் கீழ் வாகனங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 2,850,000 ஆன நிதியேற்பாட்டில் ஆண்டினுள் ரூபா 2,846,235 பயன்படுத்தப்பட்ட பின்னர் சேமிப்பானது ரூபா 3,865 ஆகும். எனினும் சேமிப்பினை மிகைத்து ரூபா 891,061 ஆன பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்பட்டிருந்தது. | அவதானிப்பினை ஏற்றுக் கொள்கின்றேன். | நிதியேற்பாட்டினை மிகைத்து பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படக் கூடாது |

## 2.5 முற்பண வழங்கல் மற்றும் தீர்ப்பனவு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நி.பி 371 (5) பிரகாரம் பணி நிறைவடைந்ததும் 10 நாட்களுக்குள் பெற்றுக் கொள்ளப்பட்ட இடைக்கால கட்டுநிதிகள் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சின் ஏழு உத்தியோகத்தர்களினால் 16 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக் | வரும் 10 நாட்களுக்குள் முற்பணத்தினை தீர்க்குமாறு உத்தியோகத்தர்களுக்கு தெரிவிப்பதற்காக உள்ளக | ந.பி 371 (5) ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| கொள்ளப்பட்டிருந்திருந்த ரூபா 256,858 ஆன இடைக்கால கட்டுநிதிகள் தீர்க்கப்படுவதற்காக 03 நாட்கள் தொடக்கம் 101 நாட்கள் வரையான கால வீச்சு எடுக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது. |

## 2.6 வங்கி கணக்குகளை செயற்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இன் பின்னர் இந்த தலைப்பு இரத்து செய்யப்பட்டிருப்பினும் அமைச்சிற்காக திறக்கப்பட்ட வங்கி கணக்கு 2022 மே 30 ஆம் திகதி வரையிலும் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரச சேவை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு வழங்கப்பட்ட 3 காசோலைகள் இது வரையில் தேறாதிருப்பதனால் கணக்கினை மூடுவதற்கு முடியாது போனது. விரைந்து வங்கி கணக்கினை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கின்றேன். | வங்கி கணக்கினை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

# 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆண்டின் செயல் நடவடிக்கை திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 257 மில்லியன் கிரயத்திற்கு மதிப்பிடப்பட்ட 12 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | கொவிட் 19 நிலையின் கீழ் மற்றும் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படாமையினால் சில செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட முடியாதிருந்தது. | செயல் நடவடிக்கை திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்ட பணிகள் ஆண்டினுள் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அமைச்சின் கீழ் 15 விசேட பொருளாதார மத்திய நிலையங்கள் காணப்படுகின்ற போதிலும் வேயங்கொட மத்திய நிலையத்தின் காணி மற்றும் கட்டிடம் மட்டும் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் எஞ்சிய பொருளாதார மத்திய நிலையங்களின் காணிகள் மற்றும் கட்டிடங்கள் மதிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த அமைச்சு புதிய அமைச்சு என்பதனால் மற்றும் போதுமான உத்தியோகத்தர்கள் அமைச்சிற்கு கிடைக்கப் பெறாமையினால் இந்த பணிகள் உரிய வண்ணம் நிறைவேற்ற முடியாது போனது. 2281/41 ஆம் இலக்க 2022.05.27 திகதிய வர்த்தமானி பத்திரிக்கையின் ஊடாக பொருளாதார மத்திய நிலையங்கள் வர்த்தக அமைச்சிற்கு கையளிக்கப்பட்டுள்ளதையும் தெரிவிக்கின்றேன். | அமைச்சிற்கு சொந்தமான அனைத்து பொருளாதார மத்திய நிலையங்களும் நிதிக் கூற்றுக்களுக்கு உள்ளடக்கப்படல் வேண்டும். |

## 3.3 முகாமைத்துவ நலிவுகள்

### 3.3.1 ஜீவதுரு உதான தேசிய வேலைத்திட்டம்

கர்பிணி தாய்மார்கள், பால் கொடுக்கும் தாய்மார்கள் மற்றும் 5 வயதிற்கு குறைந்த பிள்ளைகளின் போசணை மட்டத்தினை உயர்த்துவதனை நோக்காக கொண்டு கமநல அபிவிருத்தி திணைக்களம் மற்றும் விவசாய இராஜாங்க அமைச்சு ஒருங்கிணைந்து ''ஜீவதுரு உதான'' தேசிய வேலைத் திட்டத்தினை செயற்படுத்துவதற்காக 2021 மே 04 திகதிய அமப/21/0689/323/026 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மாணத்தின் ஊடாக அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. இதன் கீழ் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களின் உதவியுடன் அனைத்து விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி பிரிவிலும் தெரிந்துக் கொண்ட 100 நலனாளி குடும்பங்களாக பத்து இலட்ச முருங்கை கன்றுகள் பத்து இலட்ச வீட்டு தோட்டங்களில் நடுவதற்கு 2021 ஆம் ஆண்டில் இராஜாங்க அமைச்சின் உணவு பாதுகாப்பு செலவின விடயத்திலிருந்து ரூபா 55.62 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 41.96 கிரயமான 999,211 முருங்கை கன்றுகள் பகிர்தளிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்ட 2021 ஏப்ரல் 06 திகதிய Pa/36/2021 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 3:2 முன்மொழிவின் கீழ் மேற்படி வேலைத்திட்டத்திற்கு தேவையான முருங்கை மரக் கன்றுகள் மாவட்டத்தில் அமைந்துள்ள விவசாய திணைக்களத்தின் 33 தாவர நாற்றங்கால்கள் ஊடாக பெற்றுக் | தேசிய ரீதியில் முருங்கை மர உற்பத்தியொன்று மேற்கொள்ளப்படாமையினால் மற்றும் கொவிட் தொற்று நிலையின் கீழ் இறக்குமதி செய்யும் திறன் கொண்ட, விவசாய திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட, A தரத்தின் கீழ் தரப்படுத்தப்பட்ட, | புலனாய்வொன்று மேற்கொண்டு முறைக்கேடுகள் நேர்ந்துள்ளதா என தேடியறிதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வதற்கு முன்னுரிமை பெற்றுக் கொடுப்பதற்கு மற்றும் அவ்வாறு முடியாத சந்தர்ப்பத்தில் மட்டும் பதிவு செய்யப்பட்ட தனியார் தாவர நாற்றங்காலுடையவர்களிடம் கொள்வனவு செய்வதற்கு முன்மொழிவு செய்யப்பட்டிருந்தது. எனினும் மேற்படி நிகழ்ச்சித்திட்டத்திற்காக விவாசாய திணைக்களத்தின் நாற்றங்காலிலிருந்து முருங்கை கன்றுகள் கொள்வனவு செய்வதற்காக விவசாய திணைக்களம் அல்லது மாவட்ட நாற்றங்கால்கள் உடன் கலந்துரையாடப்பட்டமைக்கு எந்தவொரு பதிவேடும் கோவைக்குள் உள்ளடக்கப்பட்டிராமையினால் அமைச்சரவை பரிந்துரைக்கு முரணாக தனியார் நாற்றங்கால் உரிமையாளர்களிடமிருந்து மட்டும் முருங்கா மரக் கன்றுகள் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் தாவர நாற்றங்கால் உரிமையார்களை தெரிவு செய்த அடிப்படை தெளிவுப்படுத்தியிருக்கவில்லை. | பாரியளவிலான கன்றுகள் உற்பத்தி செய்யும் கன்று வழங்குனர்கள் ஊடாக முருங்கை மர கன்றுகள் அதிகளவு பெற்றுக் கொள்வதற்கு திறன் காணப்பட்டமையினால் அவசர தேவை கருத்திற் கொள்ளப்பட்டு அவ்வாறு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | |
| (ஆ) | அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 3.3 மற்றும் 3.4 ஆம் முன்மொழிவுகளின் பிரகாரம் மாவட்டத்தினுள் கன்று தேவைகள் பூர்த்தி செய்யும் போது மாவட்டத்தில் அனைத்து பதிசெய்யப்பட்ட தாவர நாற்றங்கால் உரிமையாளர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கும் விதத்தில் மாவட்ட கமத்தொழில் அபிவிருத்தி/ உதவி ஆணையாளரின் தலைமைத்துவத்திலான குழுவின் ஊடாக அந்தந்த தாவர நாற்றங்கால்களிலிருந்து கொள்வனவு செய்யப்படுகின்ற தாவர எண்ணிக்கை தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மாவட்ட குழு நியமிக்கப்படாது மற்றும் மாவட்ட தாவர நாற்றங்கால் உரிமையாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்படாது தெரிவு செய்யப்பட்ட 15 தாவர நாற்றங்கால் உரிமையாளர்களிடம் மட்டும் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | அடிப்படை கட்டத்தின் பிரகாரம் 673,500 கன்றுகள் 2021.04.17 திகதிக்கு முன்னர் குறித்த பிரிவுகளுக்கு பகிர்ந்துக் கொடுக்க வேண்டியிருந்தது. இந்த காலக் கட்டத்தினுள் காணப்பட்ட கொவிட் தொற்று நிலைமை மற்றும் வேலைத்திட்டம் செயற்படுத்துவதற்கிருந்த காலம் மிகவும் குறுகிய காலமாகியமையினால் மாவட்ட குழு கூட்டப்பட்டு தீர்மாணம் எடுப்பதற்கு காலம் செல்கின்றமையினால் குறித்த குழு உறுப்பினர்கள் தொலைப்பேசியினூடாக தொடர்புக் கொண்டு கன்றுகள் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கமத்தொழில் அபிவிருத்தி ஆனையாளர் நாயகத்தினால் பிரதி/உதவி ஆனையாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தற்போது தாவர நாற்றாங்கால் உரிமையாளர்களில் முருங்கை கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டிருந்த 15 தாவர | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | | நாற்றங்கால்களிலிருந்து முருங்கை கன்றுகள் கொள்வனவு செய்யப்பட்டன. | |
| (இ) | கன்றுகள் வழங்கப்பட்ட 15 தாவர நாற்றங்கால் உரிமையாளர்களில் 4 நாற்றங்கால் உரிமையாளர்களினால் வழங்கப்பட்ட 700,000 இற்கு மேற்பட்ட கன்றுகள் கருத்திற் கொள்ளப்படும் போது இந்த செயற்திட்டத்திற்காக கன்றுகள் வழங்குவதற்கு முழுமையான ஆயத்தத்துடன் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென மற்றும் அத் தாவர நாற்றங்கால் உரிமையாளர்களிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு திட்டத்துடன் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | தேசிய ரீதியில் முருங்கை மர உற்பத்தி மேற்கொள்ளப்படாமையினால் மற்றும் கொவிட் தொற்று நிலையின் கீழ் இறக்குமதி செய்யும் திறன் கொண்ட, விவசாய திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட, A தரத்தின் கீழ் தரப்படுத்தப்பட்ட, பாரியளவிலான தாவர உற்பத்தி செய்யும் கன்று வழங்குனர்கள் ஊடாக முருங்கை மர கன்றுகள் அதிகளவு பெற்றுக் கொள்வதற்கு திறன் காணப்பட்டமையினால் அவசர தேவை கருத்திற் கொள்ளப்பட்டு அவ்வாறு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | புலனாய்வொன்று மேற்கொண்டு முறைக்கேடுகள் நேர்ந்துள்ளதா என தேடியறிதல் வேண்டும். |
| (ஈ) | மாவட்ட விவாசாய திணைக்கள தகவல்களின் பிரகாரம் வயலில் நடும் வரை பயிரொன்று தயாரிப்பதற்கு எடுக்கும் காலம் 06 வாரங்கள் மற்றும் பயிரொன்றின் கிரயம் அண்ணளவாக ரூபா 24 ஆகும். குறித்த விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி பிரிவு வரை போக்குரத்தும் உட்பட மொத்த கிரயம் ரூபா 30 இனை விட குறைவாகும். அதன் பிரகாரம் 06 வாரங்களுக்கு முன்னர் செயற்திட்டம் திட்டமிடப்பட்டு விவாசாய திணைக்கள தாவர நாற்றங்கால் ஊடாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை காரணத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட பயிர் இருப்பில் அரசிற்கு அண்ணவளாக ரூபா 11,990,532 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | விவாசாய திணைக்களத்தின் முருங்கை மர கன்றொன்று 2021 ஏப்ரல் விலைகளின் பிரகாரம் ரூபா 50 ஆகும். அதன் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட தாவர நாற்றங்கால் உரிமையாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட முன்மொழிவின் பிரகாரம் விவசாய திணைக்களத்தில் ரூபா 50 ஆன முருங்கை மரக் கன்றானது ரூபா 42.00 விலைக்கு போக்குவரத்து கட்டணம் அறவிடலின்றி பதிவுசெய்யப்பட்ட தாவர நாற்நங்கால் உரிமையாளர்களிடம் கொள்வனவு செய்வதற்கு அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.<br>முருங்கை மரக் கன்று விவாசாய திணைக்களத்தின் ஊடாக கொள்வனவு செய்வதெனில் ரூபா 50 மற்றும் போக்குவரத்து கட்டணமும் செலுத்தப்பட வேண்டியமையினால் இந்த கொள்வனவின் ஊடாக அரசிற்கு நட்டம் ஏற்பட்டிருக்கவில்லை. | புலனாய்வொன்று மேற்கொண்டு முறைக்கேடுகள் நேர்ந்துள்ளதா என தேடியறிதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | வேலைத்திட்டத்தின் செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் அறிவித்தல் மற்றும் பயிற்சி அறித்தலுக்காக கிரயம் ரூபா 4 மில்லியனிற்கு மட்டுப்படுத்தப்பட வேண்டிய போதிலும் உள்ளவாரான செலவினம் ரூபா 5,840,469 ஏற்க நேர்ந்தமையினால் மதிப்பிட்ட கிரயத்தினை மிகைத்து அறிவித்தல் மற்றும் பயிற்சி அளித்தலுக்காக ரூபா 1,840,469 மேலதிகமாக செலவிடப்பட்டிருந்தது. | பயிற்சி அளித்தலுக்காக மதிப்பிடப்பட்ட ரூபா 4 மில்லியன் நிதியேற்பாட்டினை மிகைத்திருப்பினும், மேற்படி வேலைத்திட்டத்திற்குரிய மொத்த மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டினை மிகைத்திருக்கவில்லை. | -மேற்படி- |
| (ஊ) | வேலைத்திட்டத்தினை செயற்படுத்துவதற்காக ஆலோசனை பெற்றுக் கொடுத்து விவசாய இராஜாங்க அமைச்சின் செயலாளரினால் கமநல அப்விருத்தி ஆனையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்ட 2021 ஏப்ரல் 03 திகதிய 03/2021/ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் குறித்த விவசாய ஆராய்ச்சி மற்றும் தயாரிப்பு உதவி பிரிவிற்கு கொள்வனவு செய்யப்படுகின்ற கன்றுகள் பயணித்தல் வேண்டும். அதன் பிரகாரம் பயிர்கள் பகிர்ந்தளித்தல் குறித்த பிரிவினுள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் கமநல அபிவிருத்தி மத்திய நிலையங்கள் அருகே பயிர்களின் பகிர்ந்தளிப்பு தொடர்பாக பனர்கள் காட்சிக்காக ரூபா 1500 ஆக ரூபா 350,999 ஆன விளைவற்ற பிரச்சார செலவொன்று ஏற்கப்பட்டிருந்தது. | முருங்கை கன்று மட்டும் பகிர்ந்தளிப்பதனை தாண்டி மக்களின் விழிப்புணர்வினை மேம்படுத்துவதற்காகவும், அதனூடாக மேற்கூறப்பட்ட மக்கள் தொகுதியினை நிலைபேறான ஊட்டச்சத்து மூலத்தின் ஊடாக ஊட்டசத்து குறைப்பாட்டை குறைப்பதற்கும் அவ் விடயத்தினையும் உள்ளடக்கி பெனர் தயாரிக்கப்பட்டுள்ளது. | விளைவற்ற செலவினம் ஏற்காதிருக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (எ) | மாவட்டங்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டிய கன்றுகளின் அளவு கமநல அபிவிருத்தி ஆனையாளர் நாயகத்தின் 2021 ஏப்ரல் 07 திகதிய “7/5/11-05-ஜீவதுரு உதான” கடித்தின் ஊடாக மாவட்ட பிரதி/உதவி ஆனையாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டிருப்பினும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளுக்கு முரணாக 04 சந்தர்ப்பங்களில் மேலதிக கன்றுகளும், 03 சந்தர்ப்பங்களில் குறைவான கன்றுகளும் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. | "ஜீவதுரு உதான" பத்து இலட்ச முருங்கை கன்றுகள் நாட்டும் வேலைத்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்காக முறையே 8,000, 22,000, 13,000 மற்றும் 9,000 ஒதுக்கப்பட்டு, அவை பகிர்ந்தளிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் மேலதிக பகிர்ந்தளித்தலொன்று இடம் பெற்றிருக்கவில்லை. இரு கட்டங்களின் கீழேயும் களுத்தரை, இரத்தினபுரி மாவட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த கன்றுகளின் அளவு முறையே 54,000 மற்றும் 44,500 ஆக காணப்பட்டதுடன் காலநிலை | புலனாய்வொன்று மேற்கொண்டு முறைக்கேடுகள் நேர்ந்துள்ளதா என தேடியறிதல் வேண்டும். |

**<u>மேலதிக கன்றுகள் விநியோகிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள்</u>**

| மாவட்டம் ----------- | விநியோகிப்பதற்கு குறிக்கப்பட்ட அளவு --------- | விநியோகிக்கப்பட்ட கன்றுகளின் அளவு -------- | அதிகமாக விநியோகிக்கப்பட்ட அளவு -------- | மேதலிகமாக விநியோகிக்கப்பட்ட (%) சதவீதம் ------ |
|---|---|---|---|---|
| I திருகோணமலை | 1,400 | 8,000 | 6,600 | 471 |
| ii திருகோணமலை | 10,000 | 22,000 | 12,000 | 120 |
| iii மன்னார் | 9,200 | 13,000 | 3,800 | 41 |
| iv முல்லைத்தீவு | 4,600 | 9,000 | 4,400 | 95 |

**<u>குறைவாக கன்றுகள் விநியோகிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள்</u>**

| மாவட்டம் ----------- | விநியோகிப்பதற்கு குறிக்கப்பட்ட அளவு --------- | விநியோகிக்கப்பட்ட கன்றுகளின் அளவு -------- | கறைவாக விநியோகிக்கப்பட்ட அளவு --------- | குறைவாக விநியோகிகப்பட்ட (%) சதவீதம் ------- |
|---|---|---|---|---|
| I களுதரை | 56,500 | 32,135 | 24,365 | 43 |
| iiபொலன்னறுவை | 22,500 | 14,528 | 7,972 | 35 |
| iii இரத்தினபுரி | 46,700 | 36,178 | 10,522 | 22 |

தாக்கத்தினால் பகிர்ந்தளிப்பதற்கு பொருத்தமற்ற நிலையில் இறந்து போன கன்றுகளின் அளவினால் முறையே 47,200 மற்றும் 44,099 அளவு வரையில் குறைந்தது. அவ்வாறே பொலன்னறுவை மாவட்டத்திற்கு 20,500 கன்றுகள் ஒதுக்கப்பட்ட போதிலும் 14,528 கன்றுகள் மட்டும் பகிர்ந்தளிக்கப்பட்டதெனவும் அதற்காக மட்டும் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதெனவும், மழை காரணத்தினால் முருங்கை கன்று நாடலில் பயிர்களுக்கு சேதம் ஏற்படக் கூடுமென்பதனால் இரண்டாம் கட்டம் செயற்படுத்துவதற்கு முடியாது தாமதமாகியமை அவதானிக்கப்பட்டது.

(ஏ) நாட்டிலுள்ள அனைத்து விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி பிரிவிலும் தெரிவு செய்யப்பட்ட 100 நலனாளி குடும்பங்களின் பத்து இலட்ச தோட்டங்களில் முருங்கை கன்றுகள் நாட்டுவதற்கு விவசாய இராஜாங்க அமைச்சின் செயலாளரின் 2021 ஏப்ரல் 05 திகதிய 03/2021 ஆம் இலக்க சுற்றறிக்கை ஊடாக ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக ரூபா 2,353,050 பெறுமதியான 56,025 கன்றுகள் சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது.

ஜீவதுரு உதான வேலைத்திட்டம் பிரதானமாக செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக ஆகும். இதற்கு மேலதிகமாக, சிவில் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் மகாவலி அதிகார சபையினாலும் முருங்கை கன்றுகள் கோரப்பட்டதுடன் இந்த தேசிய வேலைத்திட்டம் ஊட்டச்சத்துடைய முருங்கை ஊக்குவிப்பு வேலைத்திட்டம் என்பதனால், அதன் கோரிக்கையின் பிரகாரம் அவர்களுக்காகவும் முருங்கை கன்றுகள் பெற்றுக் கொடுக்கும் தேவை கருத்திற் கொள்ளப்பட்டு, விவசாய இராஜாங்க அமைச்சர், மதிப்பிற்குரிய சசிந்திர ராஸபக்ஷ உடன் விவசாய இராஜாங்க அமைச்சில் நடைப்பெற்ற கலந்துரையாடலின் போது சிவில் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் மாகாவலி அதிகார சபைக்கும் 157,500 முருங்கை கன்றுகள் பெற்றுக் கொடுப்பதற்கு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

புலனாய்வொன்று மேற்கொண்டு முறைக்கேடுகள் நேர்ந்துள்ளதா என தேடியறிதல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழுள்ள 06 கமநல மத்திய நிலைகளுக்கு ரூபா 237,300 பெறுமதியான 5,650 முருங்கை கன்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ள போது செயற்திட்டத்தின் ஊடாக ரூபா 2,688,000 பெறுமதியான 64,000 கன்றுகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக மகாவலி அதிகார சபை ஊடாக கன்றுகள் விநியோகிக்கப்பட்ட பிரதேசங்களுக்கே விநியோகிக்கப்பட்டிருந்தது. | சிவில் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் மகாவலி அதிகார சபை ஒரே இடத்திற்கு இரு தடவைகள் பெற்றுக் கொடுத்தல் தவிர்ப்பதற்காக கமநல அபிவிருத்தி ஆனையார் நாயகத்திற்கு பிரதி/உதவி ஆனையாளர்கள் மற்றும் ஒட்டுமொத்த தாவர நாற்றங்கால் உரிமையாளர்களின் சங்கத்தின் அங்கத்தவர்களை ஒருங்கிணைக்குமாறு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஒ) | கன்றுகள் பகிர்ந்தளிக்கப்படும் சந்தர்ப்பத்தில் பெற்றுக் கொடுப்பதற்காக முருங்கை மரத்தின் விபரங்கள் உள்ளடக்கப்பட்ட ரூபா 2,100,000 பெறுமதியுடைய அச்சிடப்பட்ட துண்டு பிரசுரங்கள் பத்து இலட்சத்தில் ரூபா 48,300 பெறுமதியான 26,300 துண்டு பிரசுரங்கள் 2022 பெப்ரவரி 18 ஆம் திகதி வரையிலும் பகிர்ந்தளிக்கப்படாது கொழும்பு மற்றும் மொணராகலை கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. | ஜீவ துரு உதான வேலைத்திட்டத்திற்குரிய அரச நிகழ்வு விவசாய இராஜாங்க அமைச்சர், சசிந்திர ராஜபக்ஷ அவர்களின் தலைமைத்துவத்தில் மொணராகலை மாவட்டத்தின் சிங்கள மற்றும் இந்து புத்தாண்டின் தலையில் எண்ணெய் வைக்கும் நல் நேரத்திற்கு ஒத்து 2021.04.17 ஆம் திகதி நடத்தப்பட்டதுடன் கொவிட் தொற்று நிலையினால் மக்களின் பங்கேற்றலில் காணப்பட்ட குறைவினால் துண்டு பிரசுரங்கள் பகிர்ந்தளிப்பதற்கு முடியாது எஞ்சியது. அவ்வாறே கொழும்பு மாவட்டத்தினுள் கொவிட் தொற்று நிலை பாரியளவில் பரவலாக காணப்பட்டமையினால் அலுவலகத்தின் உத்தியோகத்தர்களும், அத் தொற்றிற்கு உட்பட்டிருந்தமையினால் அலுவலகம் தற்காலிகமாக மூடுவதற்கு நேர்ந்திருந்தது. எவ்வாறெனினும் கொழும்பு மற்றும் மொணராகலை மாவட்டங்களில் அவ்வாறு எஞ்சி காணப்படுகின்ற துண்டு பிரசுரங்கள் ஹரித தெயக் கெவது வகா வேலைத்திட்டத்தின் கீழ் மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்குள்ளது. | புலனாய்வொன்று மேற்கொண்டு முறைக்கேடுகள் நேர்ந்துள்ளதா என தேடியறிதல் வேண்டும். |

## 3.3.2 அரச உத்தியோகத்தர்களின் முற்பண கணக்கில் அறவிடப்படாத மீதிகள்

---

தேசிய பாதீட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் இராஜாங்க அமைச்சின் செயலாளருக்கு முன்வைக்கப்பட்ட 2021 திசெம்பர் 28 திகதிய BD/RE/118/426/04/2021 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் அதுவரை இருந்த 425 செலவின தலைப்பு இரத்து செய்யப்பட்டு 426 செலவின தலைப்புடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் அத் திகதியில் காணப்பட்ட கடன் மீதிகள் அனைத்தும் 426 செலவின தலைப்பிற்கு மாற்றப்பட வேண்டியிருந்தது. எனினும் 2 தலைப்புக்களின் இடையேயும் சரியாக கடன் மீதிகள் பரிமாற்றக் கொள்ளப்படாது 425 மற்றும் 426 செலவின தலைப்புக்களுக்காக தனித் தனியே 2 முற்பண கணக்குகள் தயாரிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ------------------------------- | ----------------------- | -------------- |
| (அ) | அமைச்சின் புத்தகங்கள் பிரகாரம் ரூபா 105,720 ஆன கடன் மீதி 426 செலவின தலைப்பிற்கு மாற்றப்படாது இரத்து செய்யப்பட்ட 425 செலவின தலைப்பின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள முற்பண கணக்கில் இன்னுமாக முன்கொண்டு வரப்பட்டிருந்தது. | இதற்கு காரணமாவது, திறைச்சேரியினால் 42501 அரச உத்தியோகத்தர்களின் முற்பண பீ கணக்கு பூஜ்ஜியமாக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் மூடப்படாமையினாலாகும். 2022 ஆம் ஆண்டில் இந்த தொகை 426 தலைப்பின் கீழ் அரச உத்தியோகத்தர்களின் முற்பண பீ கணக்கிற்கு மாற்றப்பட்டு சீர் செய்யப்பட்டுள்ளது. | இரத்து செய்யப்பட்ட முற்பண கணக்கின் மீதிகள் வேறு கணக்கொன்-றிற்கு மாற்றப்படுவ-தற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | முன்கொண்டு வந்த கடன் மீதியினுள் தவறான செலவு வைத்தலாக ரூபா 4,470 ஆன மீதியொன்று உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், தவறான செலவு வைத்தலுக்கான காரணம் பரீட்சித்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த தவறான செலவு வைத்தல் 118 செலவின தலைப்பிலிருந்து 425 செலவின தலைப்பிற்கு மாற்றும் போது ஏற்பட்டுள்ள தவறாகும். விரைந்து அதை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கின்றேன். | இணங்காணப்-பட்ட தவறான செலவு வைத்தல்கள் சீர் செய்தல் வேண்டும். |